ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2173/4 - 2020 අප්‍රේල් මස 27 වැනි සඳුදා - 2020.04.27
*2173/4 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

(முத்திரை)

கோட்டாபய ராஜபக்ஷ

### சனாதிபதியின் பணிப்புரை

முப்படை உறுப்பினர்களை கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்காகச் சகல படைகளினாலும் எடுக்கவேண்டிய செயல் நெறிகளைக் கற்றாராய்ந்து அந்நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்காக ஆலோசனை வழங்குவதற்கான சனாதிபதி செயலணியொன்றை நிறுவுதல்.

1. வான்படையின் மார்ஷல் ரொஷான் குணதிலக அவர்கள்
2. அத்மிரால் ஜயந்த பெரேரா (ஓய்வுபெற்ற) அவர்கள்
3. ரியர் அத்மிரால் ஆனந்த பீரிஸ் (ஓய்வுபெற்ற) அவர்கள்
4. மேஜர் ஜெனரால் சுமேத பெரேரா (ஓய்வுபெற்ற) அவர்கள்
5. வைத்தியர் பந்துல விஜேசிறிவர்த்தன அவர்கள்
6. வைத்தியர் வஜிர சேனாரத்ன அவர்கள்

ஆகியோருக்கு,

1A - G 32225 — 32 (2020/04)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**வாழ்த்துக்கள்!**

*கொவிட்-19 உலகத் தொற்றுநோயாகுதல் மற்றும் அதற்கிணையாக இலங்கை மக்களைப் போன்று முப்படையைச் சேர்ந்த ஆட்களும் அந்நோய்த் தொற்றுக்கு ஆளாகும்போக்கு காணப்படுகின்றதாதலாலும்,*

*இதைத் தவிர்த்துக் கொள்வதற்காகத் துரிதமாகவும் உடனடியாகவும் நடவடிக்கை மேற்கொள்வது அத்தியாவசியமான விடயமென என்னால் இனங்காணப்பட்டுள்ளதாதலாலும்,*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி பதவியை வகிக்கும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின் மீது மிகுந்த நம்பிக்கைவைத்து, மேற்குறிப்பிட்ட தங்களை,*

1. *வான்படையின் மார்ஷல் ரொஷான் குணதிலக (ஓய்வுபெற்ற) அவர்கள்*
2. *அத்மிரால் ஜயந்த பெரேரா (ஓய்வுபெற்ற) அவர்கள்*
3. *ரியர் அத்மிரால் ஆனந்த பீரிஸ் (ஓய்வுபெற்ற) அவர்கள்*
4. *மேஜர் ஜெனரால் சுமேத பெரேரா (ஓய்வுபெற்ற) அவர்கள்*
5. *வைத்தியர் பந்துல விஜேசிறிவர்த்தன அவர்கள்*
6. *வைத்தியர் வஜிர சேனாரத்ன அவர்கள்*

*மேற்போந்த சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாக பின்வரும் பணிகளைச் செயற்படுத்துவதற்காக இத்தால் நியமிக்கின்றேன்.*

1. *முப்படைகள் கொவிட்-19 பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கு நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பதால், முப்படை உறுப்பினர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றக்கூடிய சந்தர்ப்பங்களைத் தவிர்த்துக்கொள்வதற்காகச் சகல முகாம்களிலும் எடுக்கவேண்டிய செயல்முறைகளைக் கற்றாராய்ந்து அந்நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஆலோசனை வழங்குதல் ;*

2. *அந்த ஆலோசனைகள் உரியமுறையில் செயற்படுத்தப்படுகின்றனவா எனப் பரீட்சித்தல் ;*

3. *வெலிசறை கடற்படை முகாம் போன்ற அதிக அளவில் படைஉறுப்பினர்கள் தொற்றுக்குள்ளான படைமுகாம்களில் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்குரிய செயன்முறைகள் உரிய முறையில் எடுக்கப்படுகின்றதா என்பதை நிர்ணயித்தல் ;*

4. *கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான முப்படைகளின் உறுப்பினர்களின் குடும்ப உறுப்பினர்கள் பொதுக் கொள்கைகளுக்கமையத் தனிமைப்படுத்துகை முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனரா என்பதைப் பரீட்சித்துப் பார்த்தல் ;*

5. *முப்படைகளின் உறுப்பினர்களூடாக இந்நோயானது சமூக மயப்படுத்துகையைத் தவிர்த்துக் கொள்வதற்காக உச்சகட்ட பயனுறுதியான திறமுறைகளை இனங்காணுதலும் செயற்படுத்துதலும் ;*

6. *எதிர்காலத்தில் படை உறுப்பினர்கள் விடுமுறையில் செல்லும்போதுநோய் பரவுதல் மற்றும் நோய் ஏற்படுதல் என்பவற்றைத் தவிர்த்துக் கொள்வதற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை இனங்காணுதலும் செயற்படுத்துதலும் ;*

7. *இந்நோயைத் தவிர்ப்பதற்காகவும் தனிமைப்படுத்துகைச் செயற்பாடுகளின்போது படைஉறுப்பினர்களை நடவடிக்கைளில் ஈடுபடுத்துவது தொடர்பில் எடுக்கவேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதலும் அதைச் செயற்படுத்துவதை உறுதிப்படுத்தலும் ;*

8. *பொதுவாகச் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக சகல முகாம்களிலும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைத் தீர்மானித்தலும் அவை செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துதலும்.*

***மேலும், வான்படையின் மார்ஷல் ரொஷான் குணதிலக அவர்களை மேந்போந்த செயலணியின் தலைவராகவும், சனாதிபதியின் மேலதிகச் செயலாளர் (திருமதி) ரி.ரி. உபுல்மலீ அவர்களை செயலணியின் செயலாளராகவும் நியமிக்கின்றேன்.***

*மேலும், இத்தால் கையளிக்கப்படும் பணிகளை நிறைவேற்றுவதற்கு உரியதாகத் தேவைப்படக்கூடிய விடயங்களை தேடிப்பார்ப்பதற்கு மற்றும் ஆலோசனை வழங்குவதற்கு முப்படை உறுப்பினர்களை கொரோனாவைரஸ் தொற்றிலிருந்து தவிர்த்துக்கொள்வதற்காகச் சகல படைகளினாலும் எடுக்கவேண்டிய செயல்நெறிகளைக் கற்றாராய்ந்து அந்நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்காக ஆலோசனை வழங்குவதற்கான சனாதிபதி செயலணிக்கு இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.*

மேலும், முப்படை உறுப்பினர்களை கொரோனாவைரஸ் தொற்றிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்காகச் சகல படைகளினாலும் எடுக்கவேண்டிய செயல்நெறிகளைக் கற்றாராய்ந்து அந்நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்காக ஆலோசனை வழங்குவதற்கான சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களான உங்களுக்கு காலத்துக்குக்காலம் எனக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.

மேலும், முப்படை உறுப்பினர்களை கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்காகச் சகல படைகளினாலும் எடுக்கவேண்டிய செயல்நெறிகளைக் கற்றாராய்ந்து அந்நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்காக ஆலோசனை வழங்குவதற்கான சனாதிபதி செயலணியினால் ஆலோசனைகள் வழங்கக்கூடிய அல்லது சேவைகளை வழங்குவதற்காக ஒத்துழைப்பினைக் கோரக்கூடிய சகல முப்படை உறுப்பினர்களும், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அத்தகைய ஏனைய நபர்களினால் அப்பணி தொடர்பாக உரியவாறு பின்பற்றக்கூடிய அத்தகைய ஆலோசனைகளுக்கமையச் செயற்படவேண்டுமெனவும் வழங்கக்கூடிய சகல உதவிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமெனவும் சகல தகவல்களையும் வழங்கவேண்டுமெனவும் நான் இத்தால் சகல முப்படை உறுப்பினர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய நபர்களுக்கும் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

மேலும், யாதேனும் முப்படை உறுப்பினரொருவர் அல்லது அரச ஊழியர் அல்லது யாதேனும் அமைச்சின், அரச திணைக்களமொன்றின், அரச கூட்டுத்தாபனமொன்றின் அல்லது ஏனைய அவ்வாறான நிறுவனமொன்றின் உத்தியோகத்தர் ஒருவர் மேற்குறிப்பிட்ட செயலணியினால் ஒப்படைக்கப்படும் கடமைகள் மற்றும் பொறுப்புக்களைநிறைவேற்ற தாமதிக்கும் அல்லது தவறும் சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் என்னிடம் அறிக்கையிடுமாறு மேற்குறிப்பிட்டசெயலணிக்கு நான் இத்தால் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.